# அந்நிய அங்காடிக் கடைக்காரர்களுக்கு மாநகர் மன்றம் சீல் வைத்தது




கோலாலம்பூர், ஜூன் 29-

ஸ்ரீ பெட்டாலிங் வட்டார பகுதியில் வியாபாரம் செய்து வந்த ஏழு அந்நிய நாட்டு அங்காடி கடைக்காரர்களுக்கு கோலாலம்பூர் மாநகர் மன்றம் சீல் வைத்தது. ஸ்ரீ பெட்டலிங் ஜாலான் ராடின் அனும் ஜாலான் ராடின் தெங்கா ஆகிய பகுதிகளில் அமலாக்க இலாகாவினர் இத்தகைய நடவடிக்கை மேற்கொண்டனர் என்று. கோலாலம்பூர் மாநகர் மன்றம் தனது முகநூலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1974ஆம் ஆண்டு சாலை கால்வாய் மற்றும் கட்டடத்தின் சட்டத்தின் 46(1) பிரிவின் கீழ் கோலாலம்பூர் மாநகர் மன்றம் ஏழு சீல் வைக்கும் நடவடிக்கையினை மேற்கொண்டது.

மேஜைகள், நெகிழி நாற்காலிகள் மற்றும் இதர பொருட்கள் சீல் வைக்கும் நடவடிக்கைக்கு ஆட்பட்டது.

பெர்மிட் இல்லாமல் இருந்தால் ஜாலான் ஹங்துவா பகுதியில் மூன்று கூரைகளை கோலாலம்பூர் மாநகர் மன்றம் அகற்றியது.நாற்காலிகளும் மேஜைகளும் பொது இடங்களுக்கு இடையூறாக இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டது.

சீல் வைக்கப்பட்ட பொருள்களும் கருவிகளும் செராஸ் ஜாலான் லோம்போங்கில் உள்ள மாநகர் மன்றத்தின் கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டது.

கோலாலம்பூர் கூட்டரசுப் பிரதேச பகுதிகளில் கண்காணிப்பு நடவடிக்கை தொடரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.